3. அறிவிப்புகள்

(அ) மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு ஆளுநர் மகிழ்ச்சி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து, 20-3-2002 ஆம் நாளிடப்பட்ட கடிதத்தில், கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:—*

"I am happy to acknowledge receipt of the Resolution adopted by the Assembly on 15th March, 2002 thanking me for my address delivered on 9th March, 2002 to the Members of the Tamil Nadu Legislative Assembly."

4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2001-2002, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001-2002 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்து, இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு 978.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் 376.86 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான 601.34 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.*

2. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தியது, வாக்காளர் பட்டியல்கள், வாக்குச் சீட்டுகள், புகைப்பட அடையாள அட்டைகள் ஆகியவற்றை அச்சிட்டது தொடர்பான செலவுகளுக்கு "மானியக் கோரிக்கை 8 - தேர்தல்கள்" என்பதன்கீழ் கூடுதலாக 22.80 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகின்றது.